**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**

**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**

**II SEMESTER – B.A. Tamil**

Paper Code : **20UAM2A** Title of the Paper : **இக்கால இலக்கியம் -II**

DATE **:25.06.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. சஞ்சாரம் நாவல் எந்த இசைக்கலைஞர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது?
2. சஞ்சாரம் நாவலில் இடம்பெறும் சமூகப் பிரச்சனைகளைக் குறிப்பிடுக.
3. அரிதாரத்தில் இடம்பெறும் நான்கு சிறுகதைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. ஔவை நாடகத்தில் இன்குலாப் பதிவிடும் புராணச் செய்தியை எழுதுக.
5. ஔவை நாடகத்தின் கதாப்பாத்திரங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
6. முருகனின் தொன்மை குறித்து திரு.வி.க கூறுவது யாது?
7. முருகன் அல்லது அழகு நூலில் இடம் பெறும் கட்டுரை நான்கினைக் குறிப்பிடுக.
8. வரலாற்றில் எத்தனை ஔவை இருப்பதாக ஜே.ஆர்.லெட்சுமி குறிப்பிடுகிறார்.
9. அற நூல்கள் எழுதிய ஔவை குறித்து எழுதுக.
10. வெ.இறையன்பு குறிப்பு வரைக.
11. திரு.வி.க படைப்புகளை எழுதுக.
12. இன்குலாப் கவிதை நூல்கள் இரண்டினை எழுதுக

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. எஸ்.இராமகிருஷ்ணனின் மொழி ஆளுமையைச் சஞ்சாரம் நாவல் வழி விளக்குக.
14. அரிதாரத்தில் இடம்பெறும் சிறுகதையில் நும்மைக் கவர்ந்த சிறுகதை ஒன்றினை ஆராய்க.
15. ஔவை நாடகத்தின் வழி பெண் குறித்த இன்குலாப்பின் மதிப்பீட்டை எழுதுக.
16. முருகனின் அழகினை திரு.வி.க வழி எடுத்துரைக்க.
17. சங்ககால ஔவைக்கும் பக்திகால ஔவைக்கும் உள்ள வேறுபாடு யாது?
18. எஸ்.இராமகிருஷ்ணனின் இலக்கியப் பணியை எழுதுக.
19. தற்காலப் படைப்பிலக்கியப் போக்குக் குறித்து ஆராய்க.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. இசைக்கலைஞர்களின் வாழ்வியல் சிக்கல்களைச் சஞ்சாரம் வழி விவரிக்க.
21. அரிதாரம் சிறுகதையில் இடம் பெறும் சமூகச் சிக்கல்களை எடுத்துரைக்க.
22. சங்ககால ஔவையை இன்குலாப் கட்டமைக்கும் பாங்கினைக் கட்டுரை வடிவில் எழுதுக.
23. முருகன் அல்லது அழகு நூலின் இலக்கிய நயம் குறித்து விவரிக்க
24. திறனாய்வு நோக்கில் ஔவையின் இருப்பை ஜே.ஆர்.லெட்சுமி வழி ஆராய்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**

**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**

**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**

**II SEMESTER – B.A. Tamil**

Paper Code : **20UAM2B** Title of the Paper : **இலக்கணம் – நன்னூல் - II**

DATE **:26.06.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. இயற்சொல் என்றால் என்ன?
2. இடத்தால் வரும் பெயர்கள் சிலவற்றைக் கூறுக.
3. ‘ஆறும் தருவது வினையே’- பொருள் விளக்கம் தருக.
4. வியங்கோள் வினை முற்றின் விகுதிகள் யாவை?
5. அறுவகை வினாக்கள் யாவை?
6. ஒன்றொழிப் பொதுச்சொல் - பெயர்க்காரணம் தருக.
7. இடைச்சொல்லின் இலக்கணம் யாது?
8. ‘மன்’ இடைச்சொல் எவ்வெவ் பொருளில் வரும்?
9. உரிச்சொல்- பெயர்க்காரணம் தருக.
10. ‘மிகுதி’ என்னும் பொருளைத் தரும் உரிச்சொற்கள் யாவை?
11. உருபுமயக்கம்- வரையறுக்க.
12. முன்னிலை அசைச் சொற்கள் யாவை?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி**.

13. ஆகுபெயர் இலக்கணம் கூறி, அளவை ஆகுபெயர்களை வகைப்படுத்திக் காட்டுக.
14. வினையெச்சத்தை வரையறுத்து, அதன் வாய்பாடுகளைச் சான்றுகளுடன் தருக.
15. திணை, பால் வழுவமைதி குறித்து எழுதுக.
16. எல்லாவிடத்தும் வரும் அசைச்சொற்களைக் காட்டுகளுடன் தருக.
17. ஒரு குணம், பல குணம் தழுவிய உரிச்சொற்களை எடுத்துரைக்க.
18. தொகைநிலைத் தொடர்களைப் பட்டியலிட்டு, அவற்றுள் மூன்றினைச் சான்றுகளுடன் எழுதுக.
19. இயல்பு வழக்கு, தகுதி வழக்கு – வேறுபடுத்திப் பொருளுரைக்க.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி**.

20. வேற்றுமையின் வகைகளை விளக்கமாக எடுத்துரைக்க.
21. வினைமுற்று குறித்து நன்னூல் கூறும் செய்திகளை முறைப்படுத்திக் காட்டுக.
22. பொருள்கோள் இலக்கணம் கூறி, அதன் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.
23. இடையியலில் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.
24. உயிர்ப் பாகுபாட்டினைப் பவணந்தியார் எங்ஙனம் கூறியுள்ளார்?

**E - Mail Id for Uploading Answer Sheet**

**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**III SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAA3B** Title of the Paper : **தமிழ் இலக்கிய வரலாறு - I**
DATE **: 21.06.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20 மதிப்பெண்கள்)**
**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. குறுந்தொகையின் அடிவரையறை யாது?
2. எட்டுத்தொகையில் காணப்படும் புறநூல்களை எழுதுக?
3. தொல்காப்பியம் - குறிப்பு வரைக.
4. தமிழகத்தின் பழங்காலத் துறைமுகங்களைக் குறிப்பிடுக.
5. நாலடியார் - குறிப்பு வரைக.
6. முச்சங்கம் குறித்து நீவிர் அறிவன யாவை?
7. ஐஞ்சிறுங் காப்பியங்கள் யாவை?
8. திருக்குறள் எந்த நூற்றாண்டில் தோன்றியது?
9. போர்க்களம் குறித்து பாடப்பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல் எது?
10. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களைக் கொண்டுள்ளது?
11. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் எது?
12. இரட்டைக்காப்பியம் - குறிப்பு வரைக.

பகுதி - ஆ **(5 X 5 = 25 மதிப்பெண்கள்)**
**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. எட்டுத்தொகையில் காணப்படும் புறநூல்கள் குறித்து எழுதுக.
14. ஐங்குறுநூறு, கலித்தொகை சிறப்புகளை விளக்குக?
15. தமிழ் மக்களினம் குறித்து எழுதுக.
16. தொல்காப்பியர்காலத் தமிழகம் பற்றி விளக்குக.
17. நாலடியார், பழமொழி நூல் சிறப்புகளைத் தொகுத்துக் கூறுக?
18. திருக்குறளின் பெருமையினைக் விவரி?
19. சிலப்பதிகாரம் உணர்த்தும் உண்மைகளைத் தொகுத்தெழுது?

பகுதி - இ **(3 X 10 = 30 மதிப்பெண்கள்)**
**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. பத்துப்பாட்டு நூல்கள் குறித்து எழுதுக?
21. எட்டுத்தொகையில் அகநூல்கள் குறித்து விளக்கியுரைக்க.
22. திருக்குறளின் அமைப்பும் சிறப்பும் குறித்துக் கட்டுரைக்க.
23. இரட்டைக்காப்பியங்கள் காட்டும் சிந்தனைகளை எழுதுக.
24. சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்புகளை விளக்கியுரைக்க.

## E - Mail Id for Uploading Answer Sheet
## tamildepartment@lngovernmentcollege.com

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**IV SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAA4A** Title of the Paper : **தமிழ் இலக்கிய வரலாறு - II**

DATE **: 21.06.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

---

## பகுதி - அ (10 X 2 = 20 மதிப்பெண்கள்)
**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. வேளாண் வேதம் எனப்படும் நூல் யாது?
2. சிவ வணக்கம் எந்நாகரிகத்தில் இடம்பெற்றது?
3. பொன்னி நாடெனப்படுவது எது? அந்நாட்டில் பாயும் ஆற்றையும் குறிப்பிடுக.
4. யவனர் என்ற சொல் எவரைக் குறிப்பிடுகின்றது?
5. இயற்கை நெறிக்கால இலக்கியம் எப்பொருண்மையைக் கொண்டது?
6. களப்பிரர் ஆட்சிக்காலத்தில் நிலவிய சமயங்கள் யாவை?
7. திருநாவுக்கரசர் துறவியாக இருந்த சமயம் எது? அவருக்கு வழங்கப்பெற்ற பெயர் யாது?
8. சீவக சிந்தாமணிக்குப் போட்டியாக எழுந்த நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
9. திராவிடமாபாடியம் என்று அழைக்கப்படும் நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
10. தத்துவ நெறிக்காலத்தில் தோன்றிய நூல்கள் எத்தனை? அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.
11. பாரதியின் காலத்தில் நிகழ்ந்த புரட்சி யாது? அப்புரட்சியின் பொருண்மையைச் சுட்டுக.
12. அறிவியல் நெறியின் போக்கினைச் சுட்டுக.

## பகுதி - ஆ (5 X 5 = 25 மதிப்பெண்கள்)
**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி**.

13. விஜயநகர நாயக்கர் காலத்தில் தமிழில் தலபுராணங்கள் தோன்றியதற்கான காரணங்களை விவரி.
14. தமிழர்க்கும், யவனர்க்கும் உள்ள தொடர்பினை விளக்குக.
15. களப்பிரர் ஆட்சியில் இருந்த சமயங்களைப் பற்றி விவரிக்க.
16. பல்லவர்காலச் சமய மறுமலர்ச்சியே பக்தி இயக்கம் என்பதை மெய்ப்பிக்க.
17. சிவஞானபோத நூலின் அமைப்பை எடுத்துரைக்க.
18. தமிழின் மறுமலர்ச்சியில் அறிவியல் முக்கிய இடம் பெறுவதைக் குறித்து எழுதுக.
19. இல்லற வாழ்வியல் குறித்துத் திருவள்ளுவர் தரும் கருத்துக்களை எழுதுக.

## பகுதி - இ (3 X 10 = 30 மதிப்பெண்கள்)
**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி**.

20. சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை விவரிக்க.
21. இயற்கை நெறிக்கால இலக்கியம் மக்கள் ஒழுக்கத்தையே முதன்மைப்படுத்தியது' என்னும் கூற்றை விவரிக்க.
22. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஏதேனும் நான்கினைப் பற்றி எடுத்துரைக்க.
23. வைணவ சமய வளர்ச்சிக்கு ஆழ்வார்களின் பங்களிப்பு குறித்துத் தொகுத்துரைக்க.
24. ஐரோப்பியர் வருகையில் அறிவியல் காலத்தை விளக்குக.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**V SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAE5B** Title of the Paper : **இதழியல்**
DATE **: 21.06.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**
**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. மகாகவி சுப்பிரமணி பாரதியார் பணியாற்றிய இதழ்கள் இரண்டினைக் கூறுக.
2. செய்தியாளர் வகைகளில் இரண்டினை எழுதுக.
3. இதழியல் கலை – நூலின் ஆசிரியர் யார் ?
4. 'தினதந்தி' இதழைத் தொடங்கியவர் யார் ?
5. இதழியல் சொல் விளக்கம் தருக.
6. அரசின் நான்காம் தூண் எது ? முதலில் அவ்வாறு கூறியவர் யார் ?
7. தமிழகத்தில் முதன் முதலில் அச்சுக்கூடம் நிறுவிய இடம் எது ?
8. NEWS – என்பதன் விரிவாக்கம் என்ன ?
9. Editor – தமிழாக்கம் தருக.
10. Must- என்ற கலைச்சொல்லின் பொருள் என்ன ?
11. இதழியல் மொழிநடை எவ்வாறு இருக்க வேண்டும் ?
12. இதழியலுக்குத் 'தலை' போன்றது எது ?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**
**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. தலையங்கம் எழுதும்முறை குறித்து விவரிக்க.
14. பக்க வடிவமைப்பின் முக்கியத்துவம் என்ன ?
15. தலையங்கங்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
16. தமிழில் வெளிவரும் வார இதழ்கள் இரண்டினைக் கூறி, அதன் உள்ளடக்கத்தை எழுதுக.
17. மக்களாட்சியில் இதழ்களின் பணிகள் எவை ?
18. விடுதலை இயக்க காலத்தில் தமிழ் இதழ்களின் பங்கு என்ன ?
19. நீவீர் படிக்கும் நாளேடு இரண்டினைப் பற்றி எழுதுக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்**)**
**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. செய்தியாளர்களின் பண்புகள் குறித்து விளக்கியுரைக்க.
21. இதழ்களின் வகைகளை விவரிக்க.
22. தமிழக இதழ்களின் தோற்றம் வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரைக.
23. செய்திகளைச் செப்பனிடுதல் குறித்து ஒரு கட்டுரை வரைக.
24. இதழியல் விளம்பரம் - நோக்கும், போக்கும் விவரித்துரைக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**VI SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAE6C** Title of the Paper : நாட்டுப்புறவியல்
DATE **:08.05.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்)
**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. பழமொழியின் தன்மையினைக் கூறுக.
2. தமிழ் நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றி வெளிவந்த முதல் தமிழ் நூல் எது?
3. நாட்டுப்புற இலக்கியத்தின் பண்புகள் யாவை?
4. நாட்டுப்புறப் பாடல்களின் வேறுபெயர்கள் சிலவற்றைக் கூறுக.
5. நடவுப் பாட்டு என்றால் என்ன?
6. விடுகதையின் வேறுபெயர்கள் யாவை?
7. கதைகளின் நோக்கம் யாது?
8. கதைப்பாடல் என்றால் என்ன?
9. நாட்டுப்புற மருத்துவத்தை எப்படி அழைப்பர்?
10. ஆடவர் விளையாட்டினைக் கூறுக.
11. பாவைக் கூத்தின் வகைகள் யாவை?
12. காவடியாட்டம் - விளக்குக.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்)
**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. நாட்டுப்புற மக்களின் திருவிழாக்கள் மற்றம் தெய்வங்கள் குறித்து எழுதுக.
14. ஏட்டிலக்கியத்தில் நாட்டுப்புறப் பாடல்களின் செல்வாக்கு குறித்து விளக்குக.
15. தொழிற்பாடல்கள் குறித்து விவரித்து எழுதுக.
16. விடுகதைகளின் வகைகளை விளக்கி வரைக.
17. நாட்டுப்புறக் கதைகளின் வகைப்பாட்டினைக் கூறுக.
18. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் குறித்து விளக்குக.
19. நாட்டுப்புறவியலும் சமூகவியலும் குறித்து விளக்குக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)
**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. கதைமொழிப் பாடல்கள் உணர்த்தும் சமூகவியல் சிந்தனைகளை விவரித்தெழுதுக.
21. நாட்டுப்புறவியல் வளர்ச்சி வரலாறு குறித்துக் கட்டுரைக்க.
22. நாட்டுப்புறப் பாடல்களின் வகைகளும் பாகுபாடுகளும் குறித்துத் தொகுத்துரைக்க.
23. பழமொழிகளின் வகைப்பாடுகள் பற்றி எடுத்துரைக்க.
24. நாட்டுப்புறவியலும் உளவியலும் குறித்து விளக்கி வரைக.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**VI SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAE6D** Title of the Paper : **அடிப்படைக் கணினியியல்**
DATE **: 21.06.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

---

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. RAM – விரிவாக்கம் தருக.
2. கணினி அதிகப் பயன்பாட்டில் உள்ள துறைகள் யாவை?
3. பாஸ்கல் எந்த வயதில் அரிய கண்டுபிடிப்புகளை உலகிற்குத் தந்தார்?
4. கணினியில் நாம் சேர்த்துவைக்கும் பைல்கள் எங்கு சேமிக்கப்படுகின்றன?
5. தமிழில் வெளிவந்துள்ள கணிப்பொறி நூல்கள் எவையேனும் மூன்றினை எழுதுக.
6. வலைப்பூ என்பதன் ஆங்கிலச் சொல்லைத் தருக.
7. Indian Institute of Science நிறுவனம் எங்குள்ளது?
8. மனிதன் கம்ப்யூட்டருடன் தகவல் பரிமாற்றம் செய்யத் தேவைப்படும் மொழி எது?
9. கம்ப்யூட்டரை Shut Down செய்யாமல் லாக் ஆ∴ப் (log off) செய்வது ஏன்?
10. E-mail நிறுவனங்கள் எவையேனும் இரண்டினை எழுதுக.
11. தமிழ்ப்புத்தகங்களைத் தேடுவதற்கு பயன்படுத்தும் இணையதளங்கள் யாவை?
12. இணைய தொலைபேசி (Net Phone) என்றால் என்ன?

பகுதி - **ஆ (5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி**.

13. KB, MB, GP, TB - விரிவாக்கம் தருக.
14. கணிப்பான் (Calculator) குறிப்புத் தருக.
15. கணினியின் வகைகள் யாவை?
16. MICR என்றால் என்ன? விளக்கம் தருக.
17. கலைச்சொல் தருக.

1) Abacus, 2) Barcode, 3) Binary Code, 4) Delete, 5) Numeric

18. மடிக்கணினி பயன்படுத்துவதில் உள்ள பயன்கள் யாவை?
19. கணினி இயங்குவதற்கு காரணமான அடிப்படைப் பொருள்கள் யாவை?

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி**.

20. காணொலிக் காட்சி (Video Conferencing) முக்கிய அம்சங்கள் யாவை?
21. இணையதள வசதிகள் நமக்கு எவ்வாறெல்லாம் உதவி செய்கின்றன. ஆராய்க.
22. கணினித் துறையில் காலவாரியாக ஏற்பட்டுள்ள வளர்ச்சி குறித்து விளக்குக.
23. பிரிண்டர்களின் வகைகளைக் குறிப்பிடுக.
24. உள்ளங்கைக்குள் உலகம் என்னும் கருத்தாக்கம் உருவாவதற்கு என்ன காரணம்? விளக்குக.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**III SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM3C** Title of the Paper : **நம்பியகப்பொருள்**

DATE **:07.05.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. 'ஒருவழித்தணத்தல்' என்பது யாது?
2. செலவழுங்குதல் பற்றிக் கூறுக.
3. பாங்கி மதி உடன்பாட்டின் வகைகள் யாவை?
4. தெளிவின் இலக்கணத்தைத் கூறுக.
5. வரைவு என்றால் என்ன?
6. மனைமருட்சி என்பது என்ன?
7. செவ்வனி பற்றி எழுதுக.
8. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன**?**
9. கற்பின் இலக்கணத்தை எழுதுக.
10. இல்வாழ்க்கையின் வகைகளைத் தெரிவிக்க.
11. ஒழிபியல் **–** பெயர்க்காரணம் கூறுக.
12. 'கருப்பொருள் பிறக்கும் இறைச்சிப்பொருளே' **–** விளக்கம் தருக.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. பத்துவகை அவத்தைகளைப் புலப்படுத்துக.
14. வரைவுகடாதல் குறித்து எழுதுக.
15. உடன்போக்கு பற்றி உரைக்க.
16. இல்வாழ்க்கை மகிழ்சியினை எடுத்துரைக்க.
17. அகப்புறப் பெருந்திணைக்கு உரியனவற்றை எழுதுக.
18. இல்வாழ்க்கையின் விரிகளை விளக்குக.
19. அகப்புறப் பெருந்திணைக்குரியவைகளாக ஒழிபியல் தரும் செய்திகள் யாவை**?**

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. கருப்பொருளின் வகைகளை எழுதி குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருளை விளக்குக.
21. பாங்கி உடன்பாட்டின் வகைகளை விவரிக்க.
22. 'கற்போடு புணர்ந்த கவ்வை' பற்றிக் கட்டுரை வரைக.
23. ஊடல் வகைகளை விளக்குக.
24. திணைமயக்கம் குறித்து விரித்துரைக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**

**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**

**III SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM3D** Title of the Paper :**இலக்கியம் –III சமயப் பாடல்களும் சிற்றிலக்கியங்களும்**

DATE **:08.05.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. பெண்பால் பிள்ளைத்தமிழன் பருவங்கள் யாவை?
2. திருக்குறுந் தாண்டகம் - சிறு குறிப்பு எழுதுக.
3. "குறவஞ்சி" பெயர் விளக்கம் தருக.
4. மாணிக்கவாசகரின் இயற்பெயரைக் குறிப்பிடுக.
5. ஆண்டாள் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.
6. பிள்ளைத் தமிழ் - என்றால் என்ன?
7. குமரகுருபரர் குறித்து எழுதுக.
8. மாணிக்கவாசகர் அருளிய நூல்களைக் கூறுக.
9. கிம்புரி, கவுரியன் – பொருள் தருக.
10. தூது என்றால் என்ன**?**
11. 'பித்தா பிறைசூடி' என்று யார் யாரைக் கூறுகிறார்**?**
12. பாங்கி வசந்தவல்லியைப் பழித்துரைத்தமைப் பற்றிக் கூறுக.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. மீனாட்சி அம்மையைக் குமரகுருபரர் எவ்வாறு தாலாட்டிப் பாடியுள்ளார்?
14. திருநாவுக்கரசர் இறைவனிடம் வேண்டுவன யாவை ?
15. வன்தொண்டரை இறைவன் ஆட்கொண்ட திறத்தை எழுத்தியம்புக.
16. திருமங்கையாழ்வார் பற்றி விளக்கமாக எழுதுக.
17. வசந்தவல்லி பந்தாடலின் சிறப்பினை விவரிக்க.
18. இறைவனை திருநாவுக்கரசர் எங்ஙனம் விளித்து மகிழ்கின்றார்**?**
19. குற்றாலக் குறவஞ்சி இலக்கியச் சுவையினை எழுதுக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. மீனாட்சியம்மையின் சிறப்புகளாகக் குமரகுருபரர் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
21. திருச்சதகத்தில் மாணிக்கவாசகர் வெளிப்படுத்தும் இறையனுபவத்தை எடுத்துரைக்க.
22. திருக்குறுந்தாண்டகத்தில் திருமங்கை ஆழ்வார் புலப்படுத்தும் இறைபக்தியை விளக்குக.
23. தமிழ்விடு தூது ஆசிரியர் குறிப்பிடும் தமிழின் சிறப்புகளைத் தொகுத்து எழுதுக.
24. குற்றால நாதரிடம் வசந்தவல்லி மையல் கொண்ட பாங்கினை விவரித்து எழுதுக.

**E - Mail Id for Uploading Answer Sheet**

**tamildepartment@lngovernmentcollege.com**

# LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204
## APRIL 2021 SEMESTER EXAMINATIONS
## IV SEMESTER – B.A. Tamil

Paper Code : **UAM4C** Title of the Paper : **புறப்பொருள் வெண்பாமாலை**

DATE **:07.05.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

### பகுதி - அ (10 X 2 = 20 மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. தானை மறம் விளக்கம் தருக.
2. வெட்சி – பொருள் தருக.
3. பிள்ளைத் தெளிவு – பொருள் எழுதுக.
4. குடை நிலை விளக்குக.
5. காஞ்சித்திணை பொருள் தருக.
6. மகன் மறுத்து மொழிதல் என்றால் என்ன?
7. காந்தள் பொருள் தருக.
8. வாகைத் திணை பொருள் தருக.
9. 'பாடாண் திணை' பொருள் எழுதுக.
10. பரிசிற்றுறை எனறால் என்ன.
11. நெடுமொழி வஞ்சி பொருள் தருக.
12. 'அரசமுல்லை' சிறு குறிப்புத் தருக.

### பகுதி - ஆ (5 X 5 = 25 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. ஆஞ்சிக்காஞ்சி இதுவுமது பற்றி எழுதுக.
14. வெட்சியின் இயல்பு யாது?
15. விரிச்சி, வேய் - இத்துறைகளை விளக்குக.
16. தழிஞ்சி, பாசறை நிலை - இத்துறைகளை விளக்குக.
17. ஊர்ச்செரு, செருவிடை வீழ்தல் பற்றி விளக்குக.
18. முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை பற்றி எழுதுக.
19. வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ குறித்து விளக்குக.

### பகுதி - இ (3 X 10 = 30 மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. நொச்சிப்படலச் செய்திகளைத் தொகுத்துரைக்க.
21. கரந்தைப் படலச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.
22. காஞ்சிப்படலச் செய்திகளைப் பற்றி விவரித்தெழுதுக.
23. வாகைப்படலச் செய்திகளைத் ஆராய்ந்து எழுதுக.
24. பாடாண் திணைப் பற்றி விவரிக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**

**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**

**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**

**IV SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM4D** Title of the Paper : **காப்பியங்கள்**

DATE **:08.05.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்கள் மற்றும் காதைகளை உடையது .
2. மனையறம்படுத்தல் என்றால் என்ன?
3. பௌத்த சமயத்தைப் பற்றிப் பேசும் முதல் தமிழ்க் காப்பியம் எது?
4. உவவனம் - என்றால் என்ன?
5. பெரியபுராணத்திற்கு வழங்கப்படும் மற்றொரு பெயர் என்ன?
6. புராணம் என்றால் என்ன?
7. மெய்ப்பொருள் நாயனார் எந்த நாட்டு அரசன்? அவரின் இறைக்கொள்கை யாது?
8. அனுமன் யாரைக்கண்டு சீதை என நினைத்தான்? யாரை இராவணன் என நினைத்தான்?
9. குறுகிய வடிவுடன் அனுமன் பவளக் குன்றில் எவ்வாறு தங்கினான்?
10. எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை சிறு குறிப்புத் தருக.
11. இயேசுபிரான் தன் தாயை ஒப்படைத்த செய்தியை எழுதுக.
12. சீறாப்புராணத்தில் உள்ள காண்டங்களை எழுதுக.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. சிலம்பு வலியுறுத்தும் மூன்று உண்மைகள் யாவை? - விளக்கம் தருக.
14. மலர்வனம் புக்க காதையில் இடம் பெறும் பீடத்தின் சிறப்பை விவரிக்க.
15. மெய்ப்பொருள் நாயனாரின் சிவநெறி மேண்மையை விளக்கி எழுதுக.
16. கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்கள் மற்றும் படலங்களை விளக்குக.
17. இலங்கைமாதேவியை அனுமன் வென்ற விதத்தினை எழுதுக.
18. தேவபிரானின் சிலுவைப்பாடுகள் குறித்து எழுதுக.
19. உமறுப்புலவர் குறிப்பு வரைக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. கோவலன் கண்ணகியைப் பாராட்டிய விதத்தினை விரிவாக எழுதுக.
21. மலர் வனத்தில் மணிமேகலைக்கு நிகழ்ந்தவற்றைத் தொகுத்து எழுதுக.
22. பெரியபுராணத்தின் சிவபக்தி நிலையை உம் பாடப்பகுதி கொண்டு நிறுவுக.
23. ஊர்தேடு படலம் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
24. தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு காப்பியங்கள் ஆற்றும் பங்கினைக் கட்டுரைக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**

**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**V SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM5B** Title of the Paper : **யாப்பருங்கலக் காரிகை**

DATE **:06.05.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. செய்யுளுறுப்புகள் யாவை?
2. அசை என்றால் என்ன? எத்தனை வகைப்படும் ?
3. தளை என்றால் என்ன?
4. அடி என்றால் என்ன?
5. வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. ஈற்றடி ஈற்றுச்சீர் ஏ,ஓ,ஈ,ஆய்,என்,ஐ என்று முடியும் பா எது?
7. செய்யுள் உறுப்புக்கள் எத்தனை?
8. கடைமுரண் என்றால் என்ன?
9. இரட்டைத்தொடை என்றால் என்ன?
10. மருட்பா என்றால் என்ன?
11. வனப்பு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
12. வாழ்த்து எத்தனை வகைப்படும்?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. "குற்றியலிகரம்" குறித்து எழுதுக.
14. "நிரையொன்றாசிரியத்தளை" என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.
15. வெண்பாவிற்குரிய "ஓசை" எது? எத்தனை வகைப்படும்? சான்று தருக.
16. நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பாவின் இலக்கணம் - சான்றுடன் விளக்கி எழுதுக.
17. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
18. கலிப்பாவின் இனங்களைச் சான்றுடன் விளக்குக.
19. ஆசு எதுகை விளக்கம் தருக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. யாப்பருங்கலக்காரிகை கூறும் "அசை" குறித்து எழுதுக.
21. யாப்பருங்கலக்காரிகையில் "அடி" பற்றி சான்றுடன் விளக்கி எழுதுக.
22. "ஆசிரியப்பா" குறித்து சான்று தந்து விளக்கி எழுதுக.
23. "வஞ்சிப்பா" குறித்து சான்றுடன் எழுதுக.
24. ஒழிபியலில், "வனப்பு" வகைகளைச் சான்று தந்து விளக்கி எழுதுக.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**

**APRIL -2021 SEMESTER EXAMINATIONS**

**V SEMESTER – B.A., Tamil**

Paper Code : **UAM5E** Title of the Paper : **சங்க இலக்கியம் (அகம்)**

DATE **:05.05.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. "பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையளே"! என யார்? யாரைப் பற்றிப் பேசுகிறார்?
2. 'நற்றிணை' - சிறு குறிப்புத் தருக.
3. குறுந்தொகைத் தலைவி பசலையுற்ற நிலைக்கு ஒப்பிடப்படும் மலர்கள் யாவை?
4. "நெய் பெய் தீயின் எதிர் கொண்டு தான் மணந்தனையம்" - விளக்கம் தருக.
5. அகநானூற்றின் முப்பெரும் பிரிவுகள் யாவை?
6. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
7. 'முல்லைக்கலி' - குறிப்பு வரைக.
8. 'ஏறுதழுவுதல்' என்றால் என்ன?
9. 'நெடுநல்வாடை' - பெயர் விளக்கம் தருக.
10. வாடையின் காரணமாக விலங்குகளுக்கு ஏற்பட்ட துன்பங்கள் இரண்டினைக் கூறுக.
11. மாலைக் காலத்தில் பெண்கள் தெய்வத்தை எவ்வாறு வணங்கியதாக நெடுநல்வாடை கூறுகிறது?
12. முல்லைக் கலியைப் பாடியவர் யார்?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. இரவுக்குறி வந்து ஒழுகும் தலைவனைத் தோழி வரைவுகடாதல் செய்த கருத்தினைப் பற்றி விளக்குக.
14. தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லுமாறு அமைந்த குறுந்தொகைப் பாடற்கருத்துகளை எழுதுக.
15. களவு வெளிப்பட்டதற்கு அஞ்சிய தலைவியின் அச்சம் நீங்கிய விதத்தினை 'முல்லைக்கலி' பாடல்வழி விளக்குக.
16. வினை முடித்து மீளும் தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லும் பாலைத்திணைப் பாடற் கருத்தினை எழுதுக.
17. நெடுநல்வாடை காட்டும் கூதிர்காலக் காட்சிகளை எடுத்துரைக்க.
18. பாசறையில் அரசன் வீற்றிருக்கும் நிலையினை நெடுநல்வாடை எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?
19. பருவம் கண்டு ஆற்றாளாகிய தலைவி, தோழிக்கு உணர்த்திடும்படி அமைந்த நற்றிணைப் பாடல் கருத்தினை எழுதுக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. நற்றிணையில் இடம் பெற்றுள்ள தோழி கூற்றுப் பாடற் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
21. தமிழரின் அகவாழ்வை சிறப்பித்தலில் குறுந்தொகையின் பங்கினை ஆராய்க.
22. 'அறத்தொடு நிற்றல்' - பற்றி விளக்கி வரைக.
23. ஏறு தழுவுதலைப் பற்றிய தோழி கூற்றினையும், தலைவி கூற்றினையும் கலித்தொகைப் பாடல்கள் வழி விவரிக்க.
24. நெடுநல்வாடை அகமா? புறமா? விவரிக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**

**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**V SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM5G** Title of the Paper : **தமிழ் மொழி வரலாறு**

DATE **:07.05.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. பேச்சுமொழி, எழுத்துமொழி என்றால் என்ன?
2. மொழியின் மூவகைப் பயன்பாடுகள் எவை?
3. போலச் செய்தல் – விளக்கம் தருக.
4. ஒருபொருட் கிளவி என்பது யாது?
5. மொழியில் நாகரிகம் என்று எதனைக் கருதுவர்?
6. மரூஉ என்பதற்கு விளக்கம் யாது? எடுத்துக்காட்டு தருக.
7. கிளைமொழி என்பது என்ன?
8. குழந்தை மொழியின் மூவகை நிலைகள் யாவை?
9. மொழித் தோற்றம் பற்றிய கட்டுக்கதைகளுக்குச் சான்று ஒன்று தருக.
10. மொழி வகைகளின் பெயர்களைச் சுட்டுக.
11. திராவிட மொழிகளை எவ்வாறு பகுத்தாய்வர்?
12. ஓவிய எழுத்து - குறிப்புரைக்க.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. மொழி ஒரு அரிய கலை - விளக்கியுரைக்க.
14. அறிவுமொழி, செயல்மொழி குறித்துக் கூறுக.
15. ஒலித்திரிபு இன்னது என எடுத்துரைத்து விளக்குக.
16. மொழியில் கடன் வாங்கல் பற்றி எழுதுக.
17. இலக்கிய மொழியின் செல்வாக்கினை விளக்கி எழுதுக.
18. ஆரிய மொழியினம் பற்றி மு.வ. கூறுவன யாவை?
19. தமிழ் எழுத்து முறைகளை அறிந்துரைக்க.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. மொழியில் மூடநம்பிக்கை, வழக்கம் ஆகியவை பெறும் இடத்தை அறிந்துரைக்க.
21. மொழியில் இலக்கணம் பற்றிய செய்திகளைக் கட்டுரைக்க.
22. கிளைமொழி, பொதுமொழி இவை பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.
23. மொழித்தோற்றக் கொள்கைகள் குறித்துக் கட்டுரை வரைக.
24. திராவிட மொழியினங்கள் பற்றி விரித்துரைக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**VI SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM6D** Title of the Paper : **சங்க இலக்கியம் – II**

DATE **:05.05.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. ஆற்றுப்படை நூல்கள் எத்தனை? அவை யாவை?
2. பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?
3. பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்து யாரைப் பற்றி பாடப்பட்டுள்ளது?
4. 'புண்ணுமிழ் குருதி' – பெயர்க்காரணம் தருக.
5. புறநானூறு விளக்கம் தருக.
6. நும் பாடப் பகுதியில் இடம் பெற்றுள்ள ஔவையார் எந்த காலத்தைச் சார்ந்தவர்?
7. எட்டுத்தொகை நூல்களில் புறநூல் எது?
8. இயன்மொழி வாழ்த்து என்றால் என்ன?
9. 'ஓங்கு' என்னும் அடைமொழியால் குறிக்கப்படும் நூல் எது?
10. வளி, விசும்பு ஆகிய சொற்களின் பொருளைத் தருக.
11. பாணனின் மனைவி பெயர் என்ன?
12. திருக்குறள் எத்தனை சீர் மற்றும் அடிகளைக் கொண்டது?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. கரிகாலனின் சிறப்புகளை விவரி?
14. புறப்பாடல்களில் காணப்படும் வரலாற்றுச் செய்திகளை எழுதுக.
15. சேரலாதனின் கொடைச் சிறப்பை விவரிக்க.
16. வயிறுபசி கூர வீயலன்
    வயிறுமா சீலியரவ னீன்ற தாயே!– இடஞ்சுட்டி பொருள் விளக்கம் தருக.
17. பாடாண்திணை விளக்கம் தருக.
18. அல்லாரை அல்லார் செறுப்பவும் ஓர் சொல்லாய் – இடஞ்சுட்டிப் பொருள் தருக.
19. அறிவின் சிறப்பு குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. கரிகாற் பெருவளத்தான் பாணனை வரவழைத்து பரிசு வழங்கிய செய்திகளை தொகுத்தெழுதுக.
21. சேரலாதனின் வெற்றிச் சிறப்பையும், காவல் சிறப்பையும் விரிவாக எடுத்துக்காட்டுக.
22. வள்ளுவர் கூறும் இறைமாட்சியைத் தொகுத்துத் தருக.
23. ஔவையார் பாடல்களில் உள்ள தனிச்சிறப்பை விவரிக்க.
24. "எல்லாப் பொருளும் நீயே" என பரிபாடல் யாரைக் குறிப்பிடுகிறது? எப்படிக் குறிப்பிடுகிறது?

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**VI SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM6E** Title of the Paper : **தண்டியலங்காரம்**
DATE **:06.05.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. உவம உருபு நான்கினை எழுதுக.
2. 'அணி' என்றால் என்ன **?**
3. தன்மையணி என்றால் என்ன **?**
4. தீவகம் **–** குறிப்பு வரைக.
5. பின்வரு நிலையணியின் வகைகளைக் கூறுக.
6. ஒட்டணி என்றால் என்ன **?**
7. தற்புகழ்ச்சி அணியை விவரி **?**
8. அதிசயவணி குறிப்பத் தருக.
9. பரியாய அணி குறிப்பத் தருக.
10. விரோத அணியின் வகைகளை எழுதுக.
11. 'வஞ்சகப்புகழ்ச்சி' என்றால் என்ன **?**
12. 'பாவிகம் என்பது காப்பியப் பண்பே' நூற்பவை கூறுக.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. இல்பொருள் உவமையணியை விளக்குக.
14. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.
15. 'பழிப்பது போலப் புகழ்வது' எந்த வகையில் அடங்கும் **?** விளக்குக.
16. வேற்றுமையணியை விவரி.
17. வேற்றுப் பொருள் வைப்பணியை எழுதுக.
18. காப்பிய இலக்கணத்தின் ஐந்து கூறுகளை எழுதுக.
19. மாறுபாடு புகழ் நிலையணியை விளக்குக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20 . உவமையின் வகைகளை விவரி.
21 . பின்வரு நிலையணியை விளக்குக.
22 . தன் மேம்பாட்டு அணியை விவரி.
23 . பரியாயவணி முதலாக விரோத அணி ஈறாக உள்ள ஒரு அணியைத் தொகுத்துரைக்க.
24. பாவிகத்தின் கூறுபாடுகளை எடுத்துரைக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**APRIL 2021 SEMESTER EXAMINATIONS**
**VI SEMESTER – B.A. Tamil**

Paper Code :**UAM6F** Title of the Paper : திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்
DATE :**07.05.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. ஒலி வகை என்றால் என்ன?
2. திருந்திய திராவிட மொழிகள் யாவை?
3. இதழ் குவி உயிர், இதழ்குவியா உயிர் - எவை?
4. உயிர் நீட்சி என்றால் என்ன?
5. கடை, கரை, தலை, நெருநை, - இச்சொற்கள் தெலுங்கில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளன?
6. உலக மொழிகளின் நான்கு பெரும் பிரவுகள் யாவை?
7. தொல்திராவிட மொழி என்றால் என்ன?
8. அடிச்சொற்கள் என்றால் என்ன?
9. இழிபொருட் பேறு - குறிப்பு வரைக.
10. இடைச்சொற்களின் இயல்பு யாது?
11. ஒலியழுத்தம் - குறிப்பு வரைக.
12. பெயர்சொற்களின் இயல்பு யாது?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. திராவிட நாகரிகச்சிறப்பு குறித்து ச. அகத்தியலிற்கம் கூறுவதை எழுதுக.
14. திராவிட மொழிகளில் ஆரியமொழிகளின் தாக்கம் குறித்து எழுதுக.
15. திராவிட மொழிகளில் மூவிடப்பெயர்கள் குறித்து எழுதுக.
16. காலம் காட்டும் இடைநிலைகள் குறித்து எழுதுக.
17. திராவிடமொழிகளில் வேற்றுமை குறித்து எழுதுக.
18. பெயரடைகள் வரும் முறை குறித்து இயம்புக.
19. சொற்றொடர் அமைப்பு முறை குறித்து எழுதுக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. மொழியின் தோற்றம் வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரைக.
21. திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் குறித்து விளக்கியுரைக்க.
22. தொல்காப்பியமும் தொடரியலும் குறித்து ச. அகத்தியலிங்கம் கூறுவதை எடுத்துரைக்க.
23. திராவிட மொழிகளில் வினைச்சொற்கள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.
24. இலக்கண அமைப்பில் வடமொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்கியுரைக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**